மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதைப்பற்றிய விவரக் குறிப்பு இல்லை.

திரு. உ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஐஸ் பிளாண்டிலே வெறும் தண்ணீரை உபயோகப்படுத்தி உற்பத்தி செய்யப்படுகிறது. அப்படி இருந்தும் தமிழ்நாட்டிலே இரண்டு ஐஸ் பிளாண்டுகளைத் தவிர, ஏனைய ஐஸ் பிளாண்டுகள் இயங்காததற்குக் காரணம், நிர்வாக சீர்கேடா அல்லது வேறு ஏதாவது காரணமா? என்பதை அறிய விரும்புகிறேன்? நாகப்பட்டினத்தில் தனியார் துறை ஐஸ் பிளாண்ட் திறக்கப் பட்டு லாபகரமாக நடந்து வருகிறது. அரசுத் துறையில் மட்டும் விலை கூட இருப்பதற்குக் காரணம் என்ன?

[முற்பகல் 9–30]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தனியாக் ஆராய்ந்து பார்க்கவேண்டும். ஆராய்ந்த பிறகுதான் அந்தக் குறை பாடுகளை நீக்க என்னென்ன வழிவகைகள் என்று காணவேண்டும்.

முன்சீப் நீதிமன்றங்களின் ரொக்க மதிப்பு அதிகார வரம்பு.

*வினா எண். 90—திரு பாபு ஜனார்த்தனன், திரு. எஸ். அரங்கநாதன்: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முன்சீப் வழக்கு மன்றங்களின் ரூ. 5,000 வரையுள்ள வழக்கு கள் வரை என்று வரையறுத்துள்ளதை உயர்த்தும் உத்தேசம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: ஆம்.

திரு. பாபு ஜனார்த்தனன்: துணைக்கோட்ட நீதி மன்றங்களில் 5,000 ரூபாய் என்ற வரையறை வெள்ளைக்காரன் காலத்தில் நிர்ணயிக்கப்பட்டது. இந்த நிலை 50 ஆண்டுகளாக இருக்கும் காரணத்தால் பணத்தின் மதிப்புக் குறைவின் காரணமாக ஐயா யிரம் என்ற தொகையை உயர்த்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: ஐயாயிரத்திலிருந்து தற் போது பதினைந்தாயிரம் வரை முன்சீப் கோர்ட்டுகளுக்கு வருகிற வழக்குகளை ஏற்கவேண்டுமென்ற சட்டத்தை இயற்ற இருக் கிறோம். அதன் காரணமாக டிஸ்ட்ரிக் கோர்ட்டில் அப்பீல் 30,000 ரூபாய் வரை வந்துவிடும். உயர்நீதிமன்றத்திற்கு வர வேண்டிய கஷ்டம் பொதுமக்களுக்கு குறையவேண்டும் என்ற நோக்கத்துடன் அவர்களுடைய கஷ்டத்தைத் தீர்க்க வேண்டு மென்ற நோக்கத்துடன் இது நடைமுறைக்குக் கொண்டு வரப்பட இருக்கிறது.

1980 ஆகஸ்ட் 1]

திரு. சி. கோபால்: முன்சீப் கோர்ட்டுகளில் இந்த மாற்றம் எவ்வளவு காலத்தில் அமல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இந்தச் சட்டமன்றத்தில் அதற்குச் சட்டம் இயற்ற இருக்கிறோம். இந்த ஆண்டிலேயே நடைமுறைக்குக்கொண்டு வர இருக்கிறோம்.

திரு. வ. சத்தியமூர்த்தி: டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டுகளில் வரையறையை 5,000 ரூபாய் என்று உயர்த்தும்போது அந்த நீதிமன்றங்களுக்கு அதிகமான வழக்குகள் வரக்கூடிய நிலை ஏற்படும். ஏற்கனவே டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டுகளில் மூன்று நான்கு ஆண்டுகளாக வழக்குகளில் தீர்ப்பு வழங்கப்படாமல் இருக்கின்றன. ஆகவே, தாலுகாவுக்கு ஒரு டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட் தேவை என்ற வகையில் அதை அமல் நடத்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: நான் ஏற்கனவே, சொன்னதுபோல் டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டின் வரையறையை 5,000 ரூபாயிலிருந்து 15,000 ரூபாய் வரை உயர்த்தும்போது மாவட்ட நீதிமன்றங்களின் அப்பலேட் ஜூரிஸ்டிக்ஷன் 30,000 ஆக வருகிறது. மக்கள் உயர்நீதி மன்றத்திற்கு வருகிற பெரும் சுமை குறையவேண்டும், பணச் செலவு குறையவேண்டுமென்ற நோக்கத்துடன்தான் இந்த மாற்றம் செய்யப்பட இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் டிஸ்ட்ரிக் முன்சீப் கோர்ட்டில் வேலை பளு சற்று அதிகமாகும். எந்த அளவுக்கு வேலைப்பளு அதிகரித்திருக்கிறது என்பதை ஆராய ஓராண்டுக்காலம் நடைமுறையில் ஆராய்ந்து தேவையானஅளவுக்கு அதிகமான கோர்ட்டுகளைத் துவங்க ஏற்பாடு செய்யப்படும்.

திரு. பாபு ஜனார்த்தனன்: இந்த ஐயாயிரம் ரூபாய் வரையறை என்பது 50 ஆண்டுகளுக்கு முன்னால் செய்யப்பட்டது. இன்று ரூபாயின் மதிப்பு குறைந்த நிலையில் அதை உயர்த்தும்போது 15,000த்திற்குப் பதிலாக 20,000 ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: உயர்நீதிமன்றத்தின் ஆய்வுக்குழு பத்தாயிரம் என்று இருந்தால் போதும் என்று பரிந்துரை செய்தது. அரசுதான் பண வீக்கத்தின் காரணமாக இந்த அளவு அதாவது பதினைந்தாயிரம் என்று உயர்த்தவேண்டுமென்று முடிவு செய்திருக்கிறது.

கூட்டுறவு கணக்குகள் தணிக்கைப் பிரிவு.

*வினா எண். 91—திரு. இரா. முத்தையா: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—